# காமியமின்றி கர்மம் செய்!



ஸ்ரீமத் தி. சு. அவிநாசிலிங்கம் அவர்கள்

ஆசிரியர்: C. U. நஞ்சப்பா

# காமியமின்றி கர்மம் செய்

## (கர்ம யோகம்)




*ஆசிரியர்*

**C.U. நஞ்சப்பா**

**முருகானந்த நிலையம்**

*சிக்காரம்பாளையம் அஞ்சல்*

*காரமடை 641 104 (கோவை மாவட்டம்)*



1986 விலை: ரூ. 3-00

முருகானந்த நிலையத் தொடர் - 14

# காமியமின்றி கர்மம் செய்

முதல் பதிப்பு - 1986

பதிப்புரிமை பிரசுரிப்பாளருக்கே

நிர்வாகி & பிரசுரிப்பாளர்
**முருகானந்த நிலையம்**
சிக்காரம்பாளையம் (அஞ்சல்)
காரமடை வழி (641 104) கோவை மாவட்டம்.

அச்சிட்டோர்:
ராஜேந்திரா ஆர்ட் பிரிண்ட்டர்ஸ்,
கன்னூர்பாளையம் சாலை, காரமடை. போன்: 301

## சமர்ப்பணம்

பெரியநாயக்கன்பாளையம் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், கோவை ஸ்ரீ அவனுசிலிங்கம் மனையியல் கல்லூரி ஆகியவற்றின் ஸ்தாபகரும் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், மஹாத்மா காந்தியடிகள் ஆகியோரின் கொள்கைப்படி நடந்து வருபவரும் கர்மயோகியுமான, எனது அருமை ஆத்ம நண்பர் ஸ்ரீமத் T.S. அவினாசிலிங்கம் அவர்கள், கருணையுடன் மக்களுக்கு ஆற்றிவரும் கைமாறு கருதாத சேவைகளுக்காக நன்றிபாராட்டி இப்புத்தகத்தை காணிக்கையாக சமர்ப்பிக்கப் படுகிறது.

கருமத்தில் பலன் பாராமல் காசினி மக்கள் வாழ
கருணையுடன் வித்யாலயம் தனைத் தோற்றுவித்து
கருத்துடனே சேவை செய்யும் கருமயோகி
அருமை நண்பர் அவினாசிலிங்கம் அடிகளாரக்கே

தன்னலத்தை தியாகம் செய்யும் தனியுணர்வு வந்தாலே
நன்னயமாய் பிரம்மமதை நண்ணிடுவாய் என்மனமே
உன்னலத்தை நீ விரும்பில் உதைபடுவாய் உலகமதில்
தன்னலத்தை விரும்பியவர் தவிப்பார்காண் என்மனமே
பிறர்நலத்தை நாடி பற்றற்று நீ வாழ்ந்தால்
பிறவியில்லை உந்தனுக்கு பேருண்மையிது என்மனமே
கர்மமது செய்யாமல் காலத்திலும் தீராது
கர்மத்தால் வந்த விதி (வினை) கண்டறிவாய் என்மனமே

—மன அறிவுறுத்தல்

## முன்னுரை

பூ, பிஞ்சு, காய், கனி போல கர்மம் பக்தி. யோகம், ஞானம் என்பது. இதில் நாம் முதலில் ஆரம்பிக்க வேண்டியது கர்மமேயாகும். இதைத் தான் ஸ்ரீமத் பகவத்கீதையிலும், பலனை எதிர் பாராமல் நற்கர்மம் செய்து ஞானமடைய வேண்டு மென்று வற்புறுத்தி சொல்லப்பட்டிருக்கிறது பல உபநிஷத்துக்களிலும், சாஸ்திரங்களிலும் இவ் வாறே கூறப்பட்டுள்ளது.

ஆகவே கர்மம் செய்வதே ஞானமடைய முதல் படியாகும். எந்த ஜீவனும் மனது இருக்கும் வரை கர்மம் செய்தே தீரவேண்டும். ஜீவர்கள் நற்கர்மம் செய்து மேல் நிலையடையவும், துர்கர்மம் செய்து கீழ்நிலையடையவும் கர்மமே காரணமாயிருக்கிறது. (நெருப்பு குச்சியையும், கத்தியையும் போல) ஆதலால் இனி பிறவாநிலையை அடைய நற்கர்மம் செய்வதே முதல் படியாகும்.

அப்படிப்பட்ட முக்கியமான கர்மத்தை நாம் எப்படி செய்தால் மேலான பதவியை அடையலாம் என்பதைத்தான் இந்நூலில் சொல்லப்பட்டிருக் கிறது. பல சாஸ்திரங்களில் ஆராய்ந்ததையும் பல மகான்களிடமிருந்து அறிந்து கொண்டதையும், எனது அனுபவத்தையும்தான் இந்நூலில் கூறி யிருக்கிறேன். இதில் கூறியபடி நடப்பது சிலருக்கு சிரமமாயிருந்தாலும்; வைராக்கியத்துடன் கடை பிடித்து அனுபவத்திற்கு கொண்டு வந்தால் அது எளிதாகிவிடும் இதை அனுபவத்தில் அறியலாம். நாம் தீவிர வைராக்கியத்துடன் நற்கர்மங்களையே முறையாக செய்து வந்தால் அதுவே கர்மயோக மாகி, மெய்ஞ்ஞானமடைய செய்விக்கிறது.

புத்தகத்தை அச்சிட புரூப் பார்த்து உதவிய கன்னார்பாளையம் நண்பர் தா. சாமப்பா, எனது குமாரன் C. N. ராமசாமி ஆகியவர்களுக்கும் அச்சிட்ட ராஜேந்திரா அச்சகத்தாருக்கும் எனது அன்பும் இறைவன் அருளும் உண்டாகுக.

முருகானந்த நிலையம்
சிக்காரம்பாளையம்
15—4—86

**C.U. நஞ்சப்பா**
ஆக்கியோன்

*காமியமின்றி கர்மம் செய்!*

## கர்மயோகம்

மனிதன் கர்மத்தைத் துறந்துவிடலாகாது. செயல்களுக்குத் தன்னை கர்த்தா என்று எண்ணும் எண்ணத்தைத்தான் அகற்றிவிட வேண்டும். அப்போது அவன் கர்மயோகம் செய்யத்தெரிந்து கொண்டவனுகிருன். தன்னுல்தான் கர்மம் நடக்கிறது என்று எண்ணுபவனுக்கு கர்மத்தின் பலன் சார்ந்து பந்தத்தைக்கொடுக்கிறது. கர்மத்திற்குத் தான் கார்த்தா அல்ல என்று நினைத்து கர்மம் செய்பவனை கர்மபலன் சார்வதில்லை. இதுவே கீதையின் தத்துவம்.

கர்மம் செய்யும் சாதகன் கர்மபலனில் ஆசை வைக்கலாகாது. எதிரி எந்த இடத்தில் எவ்வளவு பலத்துடனிருக்கிருன் என்பதை தெரிந்துகொண்டால் தான் அவனை எதிர்த்து அழிப்பது சுலபம். அதுபோல் நமக்கு எதிரியாகிய ஆசை, பஞ்சேந்திரியங்களைக் கருவியாகக்கொண்டு மனக்கோட்டையில் வசிக்கிருன் புத்தியைக்கொண்டு காரியத்தை நடத்துகிருன். ஆதலால் முதலில் மனதிலுள்ள ஆசையாகிய எதிரியை மனதைவிட்டு துரத்திஞல்தான் நாம் கர்மயோகத்தில் முன்னேற முடியும்.

ஆத்ம பரிபாகமடைய முயன்று வருகிறவர்களும் மற்றவர்களும் கர்மம் செய்தேயாகவேண்டும். அப்படி கர்மம் புரியும்போது, தான் எல்லா உயிர்களுக்கும் உபகாரம் செய்து வருகிறேன் என்று நினைக்கலாகாது. ஒரு உயிரை மற்ருெரு உயிர் மேல்நிலைக்குக் கொண்டு வருவதென்பது ஈஸ்வரசிருஷ்டியில் இல்லை.

பிறருக்கு உபகாரம் செய்வதாக நினைப்பவன் இன்னும் அஞ்ஞானத்திலேயே இருக்கிறான். ஆனால் மனபரிபாகமடைந்து ஆத்மாவில் இன்புற்று திருப்தி யடைந்து ஆத்மாவில் லயித்திருக்கும் மேலோர்கள் வினையாற்றும் கடமையிலிருந்து விலகியும் இருக்கலாம்.

பிறருக்காக உழைப்பதை பெரும் பேருகக்கருது பவனே கர்மயோகி. அப்படி செய்வதனால் அவனுக்கு பற்றுதலுண்டாகாது. ஓயாது நல்வினையாற்றிக் கொண்டிருப்பதே அவன் கடமை. பேர், புகழ். லாபம் முதலியவைவற்றைக் கருதாமல் செயலாற்றுவ தால் அதனால் வரும் பாவபுண்ணியங்கள் இரண்டும் அவனை அடைவதில்லை. அதனால் அவன் முக்தி யடைய அருகதையுடையவனாகிறான். இதுவே கர்ம யோகம் செய்யும் மார்க்கம்.

கிரகஸ்தன் தெய்வத்துக்கும், அதிதிகளுக்கும் தன் மனைவி மக்களுக்கும், உற்றார் உறவினர்களுக் கும், உலக மக்களுக்கும் உதவிபுரியக் கடமைப்பட் டிருக்கிறான். இல்வாழ்வான் தன் கடமைகளை நிறை வேற்றாது விடுவது பொருந்தாது. குடும்பி தனக்கு ஏற்பட்ட கடமைகளை முறையாக ஒழுங்குடன் சுய நலம் கருதாது செய்துவருவதே கர்மயோகமாகிறது. முறை தவறி, ஆசையால் தூண்டப்பட்டு, சுயநலம் கருதி செயலாற்றினால் பந்தம் ஏற்படும்.

விவசாயி ஒருவன் இடம், பொருள் ஏவலுடன் அறிவையும் உபயோகப்படுத்தி காலமறிந்து பயிர் செய்து பக்குவப் படுத்தினால்தான் முழுப் பலனையும்

அடைய முடியும். காலம் பக்குவம் தவறி செய்வானுல் பலனை சரியாக அடைய முடியாததைப்போல

கர்மயோகி கூலிவேலை செய்யலாம், விவசாயம் செய்யலாம், ராஜாங்கம் ஆளலாம் எந்தத் தொழிலையும் செய்யலாம். ஆனுல் தான் செய்யும் தொழிலில் சுயநலப்பற்றின்றி அகங்காரமின்றி, பேர், புகழ், கருதாமல், பலனில் பற்று வையாமல் தனக்கு இயற்கையாய் அமைந்த தொழிலை திறமையாக, ஒழுங்காக அதைக் கடமையாகக் கருதி செய்து வருவானேயாகில் அவன் கர்மயோகியாகிருன். அவனைக்கர்மம் பந்தப்படுத்தாது.

உலகில் மனிதன் கர்மம் புரியும் போது இன்ப துன்பம், நலன் கேடு, பாவபுண்ணியம் முதலியவைகள் இவனை நாடி வருவதில்லை. இவனே அவைகளை வரவழைத்துக்கொள்கிருன். இவன் ஒப்புக்கொண்டாலன்றி அவைகள் இவனிடம் வரமாட்டா. அவைகளுக்கு சக்தி கிடையாது. உலகம் திணிக்கின்ற எதையும் இவன் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதுமில்லை. இந்த உண்மையை அறிந்து கொண்டவனுக்கு கர்மயோகம் செய்வது எளிதாய்ப் போய்விடுகிறது. (எந்த ஒரு வஸ்துவையும் நாம் விரும்பி தொட்டுஎடுத்தால்தான் அது நம்மிடம் வருகிறது. அது தானுக வருவதில்லை அதைப்போல)

மனிதன் தன்னை ஆத்ம சொரூபமென்று விசாரித்தறிந்து கொள்ளாமல் ஜீவனுகப் பாவித்து உலக இன்ப துன்பங்களில் பற்று வைத்து கர்மம் புரிவதால்

இயற்கையில் இவன் எவைகளின் மேலெல்லாம் பற்று வைத்திருக்கிருனே அவைகளெல்லாம் இவனை அடிமைப்படுத்தி விடுகின்றன. (அடிமைப்பட்ட ஒருவனுக்கு சுயமரியாதையில்லாததைப்போல)

சிறிய பெரிய எல்லா ஜீவராசிகளிலும் பஞ்ச பூதங்கள் ஐந்தும் ஏற்றத்தாழ்வாய் ஒன்று கூடியிருப்பதைப்போல கர்மயோகம், பக்தியோகம், இராஜ யோகம், ஞானயோகம் இவைகளில் ஒன்றில் மற்ருென்று இல்லாமலிருக்காது. ஆனுல் நற்செயல் புரிந்து கர்மயோகம் நடத்தும் சாதகனிடம் மற்ற மூன்று யோகங்களும் குறைவாயிருக்கும். அன்புடன் பக்தியை அதிகமாய் கையாளும் பக்தனிடம் மற்ற மூன்று யோகங்களும் குறைவாயிருக்கும். மனதை அடக்கி பக்குவப்படுத்தும் சாதகனிடம் இராஜயோகம் அதிகமாயிருக்கும். மற்றயோகங்கள் குறைவாயிருக்கும். ஞானத்தை விசாரணை செய்து அறியும் சாதகனிடம் ஞானயோகம் அதிகமாயிருக்கும். மற்றவைகள் குறைவாயிருக்கும். ஆதலால் ஒவ்வொரு யோகத்திலும் எல்லா யோகங்களும் கலந்துதானிருக்கும். இதில் ஒரு யோகம் பெரியது, ஒரு யோகம் சிறியது என்கிற வித்தியாசமே கிடையாது. நான்கு யோகங்களும் முடிந்த முடிவில் ஒன்ருய் விடுகிறது. இதை சுருதியுக்தி அனுபவ பூர்வமாய் அறியலாம்.

ஒரு மலையின் உச்சிக்குப்போக கரடு முரடான சுருக்கமான வழிகளும், சுமாரான மண் பாதைகளும், தார்போட்ட ராஜபாட்டைகளுமாக அநேக பாதைகளிருக்கின்றன. எல்லா வழிகளிலும் மேலே போய்ப்

பார்க்கும்போது மலை உச்சியில் எல்லாப் பாதைகளும் ஒரே இடத்திற்குதான் வந்து சேருவதைக்காணலாம். அதைப்போல பல மதங்களிலும், பல யோக சாஸ்திரங்களிலும் சொல்லியிருக்கும் மார்க்கங்களாக பல மகான்கள் முக்தி என்னும் மலை உச்சிக்குப் போன போது அவர்கள் சென்றடைந்த மார்க்கத்தைத்தான் விரிவாயும், சுருக்கமாயும், வேதம், சாஸ்திரம் சுருதிகளில் அவர்கள் அனுபவத்தை எழுதி வைத்திருக்கிறார்கள். அவைகளை நாம் விசாரித்தறிந்து நமக்குப் பிடித்தமான ஒரு நல்ல மார்க்கத்தைக் கடைப்பிடிப்பதுதான் நமது குறிக்கோளாயிருக்க வேண்டும்.

இது எனக்கு சொந்தம், இது எனக்கு தேவை என்னும் சுயநல ஆசையே மனிதனைக் கட்டி பந்தத்தில் வீழ்த்தியிருக்கிறது. சுயநலத்தைத் தள்ளி பர நலத்தை நாடி உழைக்கும் கர்மயோகி யான் எனது என்னும் செருக்கை ஒழித்து விடுகிறான். அப்போது அவனைக் கட்டிப் பிடித்திருக்கும் பந்தமும் இல்லாமல் ஒழிந்து போகிறது.

ஹிந்து, முஸ்லீம், கிறிஸ்துவம் முதலிய எந்த மதவாதிகளானாலும், துவைத, அத்வைத விசிஸ்டாத்வைதமாகிய எந்த மார்க்க வாதிகளானாலும் சைவ, வைணவ, சாக்த முதலிய எந்த சமய வாதிகளானாலும் சுயநலத் தியாகம் செய்தவர்களே மிக மேலான நிலைக்கு வர முடியும். சுய நலம் அற்ற போதே ஜீவபோதமும் அற்றுப்போகிறது. சுயநலமுள்ளவர்கள் எந்த மதவாதிகளானாலும் எந்த சமய வாதிகளானாலும் மேல்நிலைக்கு வரமுடியாது.

விவசாயி பூமியைப் பண்படுத்தி காலமறிந்து பக்குவத்துடன் பயிர் செய்தால்தான் நல்ல பலனை எடுக்க முடியும். அதைப்போல கர்மயோகியும் கர்மமானது காலம், இடம், சூழ்நிலைக்குத் தகுந்த மாதிரி மாறுபடுவதை அறிந்து அதற்குத் தகுந்தபடி தன் அறிவால் செய்யவேண்டிய சாதனத்தை நிர்ணயித்து செய்து வர வேண்டும்.

ஜீவர்கள் கர்மமியற்றி முக்தியை அடைய உதவியாயிருப்பதே இயற்கையின் திட்டம். முக்தியை அடைவதே மனித வாழ்க்கையின் குறிக்கோள். ஆதலால் சாதகன் இயற்கையின் உதவியை சரியான பாங்கில் உபயோகப்படுத்தி இப்போது எடுத்திருக்கும் ஜென்மத்திலேயே சாதனம் புரிந்து முக்தியடைய வேண்டும்.

கர்மயோகி ஒருவன் சமயக்கோட்பாடுகளை நம்பாதவனாகவும், கடவுள் பக்தியில்லாதவனாகவும், யோக, ஞான சாதனைகள் செய்யாதவனாகவுமிருக்கலாம். ஆனால் தான் செய்யும் கர்மங்களின் பலனை விரும்பாமலும், யான் எனது என்னும் செருக்கு இல்லாமலும் பற்றற்று தான் ஆற்றும் கர்மங்களின் மூலமாகவே பந்தத்தை ஒழித்து விடுகிறான்.

நமது உலக வாழ்க்கையானது காட்டு மிருகங்கள் உள்ள இருள் சூழ்ந்த ஒருவனத்தில் அகப்பட்டுக் கொண்டது போலயிருக்கிறது. அதை விட்டு வெளியே வருவதற்கு இரண்டு உபாயங்கள் உள்ளன நமது வாழ்க்கையில் நிகழும் அனைத்தையும் நாம்

நடத்துகிறோம் என்று எண்ணுமல், கடவுள் செயல் என்று நினைத்து. அதற்கு சாக்ஷி மாத்திரமாயிருப்பது ஒன்று. நமக்கு ஏற்பட்ட கர்மத்தை முறையாக ஆசையைவிட்டு பலனை எதிர்பாராமல் நடுநிலைமையி லிருந்து யான், எனது என்னும் செருக்கற்று செய்து வருவது இரண்டாவது. முதல் வகை மிகக்கடின மானது. இரண்டாவது வகை சாத்தியமானது.

கடைக்காரன் துலாக்கோலை சமமாகப் பிடித்து முள்ளை நேராக நிறுத்தி சாமான்களை எடை போடுவ தைப்போல கர்மயோகியும் உலக மக்கள் இன்புற வேண்டுமென்றோ அல்லது துன்புற வேண்டுமென்றோ நினைத்து கர்மம் புரியக்கூடாது. நிராசையில் நிலை பெற்று கர்மம் புரிவதன் மூலம் தன்னை பந்தத்தி லிருந்து விடுவித்துக்கொள்ள முடியும். நல்ல ஆசை யின்மீது கர்மம் புரிந்தாலும் அதுவும் நல்ல பிறவி எடுக்கக்கூடிய பந்தத்தையுண்டாக்கும் என்பதை கர்மயோகி அறிந்திருக்க வேண்டும்.

அநேகவித்துக்களை உண்டாக்கக்கூடிய மரத்தை கிளைகளை மட்டும் வெட்டி விட்டால் மறுபடியும் அது தளிர்த்து வித்துக்களை உண்டாக்கும். அதை வேருடு தீயை வைத்துச் சாம்பலாக்கிவிட்டால் பின் அது எப்பொழுதும் உண்டாகாததைப்போல சுயநலம் கருதி முன் ஜென்மங்களில் செய்த கர்ம பந்தமானது இந்த ஜென்மத்தில் செயல்புரிகின்றன. இந்த ஜென் மத்திலும் அப்படியே சுயநலம் கருதி கர்மம் செய்வோ மானல் இன்னும் அநேக ஜென்மங்கள் உண்டாகிக் கொண்டேயிருக்கும். ஆதலால் சுயநலம் கருதாது பர

நலம் கருதி நமக்கு ஏற்பட்ட கர்மத்தை கடமை எனக்கருதி செய்து வருவோமானல் பழைய ஜென் மங்களிலிருந்து வந்த கர்மபந்தமானது விடுபட்டுப் போய் புதிய ஜென்மம் ஏற்பட இடமில்லாமல் போய்விடும். இதுவே கர்மயோகமெனப்படும்.

தனக்குக் கரும்பு வேண்டாம், சர்க்கரைதான் வேண்டும் என்பவனுக்கும் ஆசை இருப்பதுபோல தான் நற்கதிக்குப்போக வேண்டும் என்னும் எண் ணத்துடனே அல்லது உலக மக்களை நற்கதியில் சேர்ப்பிக்க வேண்டுமென்ற எண்ணத்துடனே நற் கர்மங்களைப் புரிகிறவனும் ஒரு ஆசையைக் கருதித் தான் கர்மம் புரிகிருன். அவன் செய்யும் கர்மம் நல்ல தாயினும் ஆசையுடன் கூடியிருப்பதால் அதுவும் இரண்டாந்தரமானதுதான். அதுவும் மேலான பிறப்பைக் கொடுக்கக் கூடியதுதான் தலைத்தர கர்ம யோகி என்பவன் தனக்காகவும் உலகமக்களுக்காக வும் நற்பதவி கிடைக்க வேண்டும் என்னும் எண்ண மும் இல்லாமல் தன் கர்மத்தை நிஷ்காமியமாகச் செய்து வர வேண்டும்.

கூலிக்காக வேலை செய்கிறவன் சொந்தக்காரன் வேலை செய்வதைப்போல் வேலை செய்ய மாட்டான் அதுபோல புண்ணியத்தையோ, சுவர்க்கத்தையோ கைமாருக கருதி வினையாற்றுகிறவன் உண்மையான பணியாற்ற முடியாது. யாதொரு கைமாறும் கருதா மல் தனக்கு ஏற்பட்ட கடமை என்று எண்ணி பணி யாற்றுவதே கர்மயோகமாகும். அதுவே முக்தி யடைய சிறந்த வழியுமாகும்.

ஒவ்வொரு தொழில் ஒவ்வொருவருக்கு சீக்கிரம் பிடிபடும். அந்தத்தொழிலைத் தெரிந்து அவன் செய்வானாகில் மிக வேகமாக முன்னேறுவான். அதைப் போல அடங்காத மனதை அடக்குதல் பொருட்டே ஆத்மசாதனம் புரிவது மனது எந்த வழியில் அதிகமாய் ஓடிக் கொண்டிருக்கிறதோ அந்த வழியிலேயே அதைவிட்டு சாந்தப்படுத்தித் திருப்ப வேண்டும். வேலைசெய்ய அவாவுடனிருக்கும் மனதை கடவுள் தொண்டு செய்யும்படியும், பாட்டுப் பாடி உருகும் மனதை கடவுள் பக்திப் பாடல்களையே பாடும்படியும், ஓயாது எண்ணங்களை எண்ணும் மனதை கடவுளின் நாமத்தையே ஓயாது எண்ணும்படியும்; விசாரணையில் ஆர்வமுள்ள மனதை ஞான விசாரணை செய்யும்படியும் விடவேண்டும். இப்படிச் செய்தால் நல்ல சமஸ்காரங்கள் (எண்ணங்கள்) மனதில் உண்டாகும். அதையும் ஒரே எண்ணத்தில் நிலை நிறுத்தி பின் அதையும் தவிர்க்க வேண்டும்.

கர்மயோக சாதகன் தன்னைத்தான் கடுமையாகக் கண்காணித்துக் கொள்ளவேண்டும், ஏன் எனில் மனமும் இந்திரியங்களும் சாதகனை சதா காலமும் வஞ்சிக்கப்பார்க்கின்றன. அடங்காத குதிரையை சவுக்கடி கொடுத்து அடக்கி ஓட்டுவதைப்போல சாதகனும் நல்லவழியினின்றும் விலகும் மனதை ஜபம், தவம், விரதம் தீர்த்த யாத்திரை முதலிய பல விரதங்கள் மூலம் திருத்தி நேர்வழிக்குக் கொண்டு வரலாம் பிராயச்சித்தம் என்பது இதுவே.

பயிர் செய்யும் விவசாயி ஒருவன் அதற்குத்தகுந்த எருவிட்டு களையெடுத்து, காலா காலத்தில் நீர் பாய்ச்சி வரவேண்டும், அப்படி செய்யா விட்டால் பயிர் நல்லபலனை கொடாது. அதுபோல கர்மயோகம் செய்யும் சாதகன் கர்மம் செய்வதோடு, ஆத்மவிசாரணையும், கடவுள் வழிபாடும் கூடவே செய்து வர வேண்டும். இல்லையேல் அது வெரும் கர்மமாய் பந்தத்தில் கொண்டு சேர்க்கும். கர்மம் என்பது என்ன? கர்மயோகம் என்பது என்ன? என்பதை சாதகன் விசாரித்து பிரித்து அறிந்து கொள்ள வேண்டும்.

பிரவிர்த்தி நிவிர்த்தி என்னும் இரண்டு மார்க்கங்களில் கர்மயோகி நிவிர்த்தி மார்க்கத்தைக் கையாள வேண்டும். பிரவிர்த்தி என்பது உலகப் பொருள்களைத் தனக்கு வேண்டுமென்று ஆசையுடன் கர்மம் செய்வதாகும் நிவிர்த்தி என்பது உலகப் பொருள்களில் பற்று வைக்காமல் நிராசையுடன் கர்மம் செய்வதாகும் நிவிர்த்தி மார்க்கம் விடுதலையை உண்டாக்கும், பிரவிர்த்தி மார்க்கம் மறுபடியும் கர்ம பந்தங்களில் ஈடுபடுத்தி விடுதலையடைய முடியாமல் செய்துவிடும்.

எந்திரத்தை கையாளத் தெரிந்த பின் அதைக் கையாண்டால் அவன் அந்த எந்திரத்தினுல் லாபமடைவான். எந்திரத்தைக் கையாளத் தெரிந்து கொள்வதற்கு முன் கையாள்பவன் எந்திரத்தையும் கெடுத்து தொழிலும் கெட்டு நஷ்டமடைவதைப் போல ஏன் கர்மம் செய்ய வேண்டும்? எப்படி கர்மம்

செய்ய வேண்டும்? எந்த கர்மம் பந்தம்படுத்துகிறது, எந்தக்கர்மம் விடுதலையடையப் பண்ணுகிறது. என்கிற கர்ம ரகசியங்களை விசாரித்து தெரிந்து கொண்டு கர்மம் செய்பவனே கர்மயோகம் செய்பவனுகிருன். அவன் செய்யும் கர்மம் பந்தத்தை கொடாமல் விடுதலையை உண்டு பண்ணும். கர்மரகசியவிபரம் அறிந்து கொள்ளாமல் கர்மம் செய்பவனை அது பந்தத்திற்குள்ளாக்கும்.

இலந்தை முள் செடியில் துணி அகப்பட்டுக் கொண்டிருப்பதைப் போல, ஜீவன் பந்தபாசத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிருன். அதை பொருமையாக ஒவ்வொரு முள்ளினின்றும் துணியை விடுவித்து எடுப்பதைப் போல ஒவ்வொரு பந்தந்திலிருந்தும் ஜீவனைசாந்தமாக நாம் செய்யும் கர்மங்களால் விடுவிக்க வேண்டும் அப்படியில்லாமல் முள்ளை விடுவிக்க வழி தெரியாமல், ஆத்திரத்தில் துணியை இழுத்தால், அது கிழிந்து உபயோகப்படாமல் போவது போல, நாமும் வழி தெரியாமல் கர்மம் செய்து வந்தால் மறுபடியும் அதிக பந்தம் ஏற்பட்டு விடுதலையடைய முடியாமல் போகும்.

இயற்கை நியதியில் அகப்பட்டிருக்கிற நாம் கர்மம் செய்யக் கடமைப்பட்டிருக்கிருேம். கர்மத்தில் இதிமார்க்கம், நேதிமார்க்கம் என இரண்டு வகைகள் உண்டு. நாம் செய்யும் கர்மத்திஞல் உண்டாகும் நல்லது கெட்டது ஆகிய பலனை எதிர்பாராமல், இன்ப துன்பத்தையும் எதிர்பாராமல் இன்ப துன்பம்

எப்பொழுதும் சாஸ்வதமானதல்ல என்பதின் உண்மையை நாம் அறிந்து கொண்டு கர்மங்களைச் செய்தால் அதன் பலன் நம்மை சாராது. இது இதிமார்க்கம். ஒவ்வொரு கர்மத்தையும் தேவை யில்லை என்று தள்ளி கடைசியில் ஒரு கர்மமும் செய்யாமல் விட்டு விடுவது நேதி மார்க்கம். இது சாதாரணமாக வாழ்க்கையில் கொண்டு வருவது கடினமானது. நாம் வைராக்கியத்தால் நேதிமார்க் கத்தை கையாண்டால்தான் விடுதலையடையமுடியும்.

நாம் செய்கிற எந்த கர்மமும் நமக்கு இன்ப துன்பத்தை உண்டு பண்ணுவதில்லை. நாம் அதன் மேல்வைக்கும் பற்றுதல் தான் நம்மை இன்ப துன்ப மடையச் செய்கிறது. உதாரணமாக நாம் ஒருவருக்கு நன்றி செய்தால் அதை ஏற்றுக்கொண்டவர் நன்றி யை உணராமல் நடந்து கொண்டால் நம் மனம் துன்பப்படுகிறது. நன்றியை உணர்ந்து நமக்கு அநு கூலமாக அவர் நடந்து கொண்டால் இன்பமடை கிறது. இது நாம் கர்மபலனில் வைத்த பற்றுதலால் தான் உண்டாகிறது. பலனில் பற்றுதலில்லாவிட் டால் இன்பதுன்ப முண்டாகாது:

தாமரையிலை தண்ணீர் போல் ஜகத்தில் கூடி வாழவேண்டும். தண்ணீர் இல்லாமல் தாமரையிலை இருக்கமுடியாது. ஆனால் தண்ணீர் தாமரையிலையில் ஒட்டுவதில்லை. அதுபோல கர்மம் செய்யாமல் உலகில் வாழமுடியாது. ஆனால் கர்மத்தினால் தன்னைப் பந்தப் படுத்திக் கொள்ளலாகாது. இதற்கு என்ன உபாயம்

என்றால் சுய நலப்பற்றை விட்டு யான் எனது என்கிற ஆசைகளையும் விட்டு கர்மம் செய்வதுதான், இதற்கு வைராக்கியம் வேண்டும். உலகப்பொருள்கள் எதனிடத்திலும் பற்றுதலில்லாது போய் விடுவதுதான் தீவிரவைராக்கியம்.

ஜீவாத்மன் தான் கர்மம் செய்கிறேன் என்று நினைக்குமளவும் உடல் மாறிமாறி வந்து கொண்டேயிருக்கும். ஒருவன் நடந்து போகும் போது அவனிடம் உள்ள மூட்டையை தலையின் மேல் தான் சுமந்து செல்லவேண்டும். ஆனால் ஒரு வண்டியில் உட்கார்ந்த பிறகு அவன் மூட்டையை தலையில் சுமந்து செல்ல வேண்டியதில்லை. அதை வண்டியே சுமந்து செல்லும் அதுபோல ஜீவன் தான் செய்யும் கர்ம வினையை கடவுளிடம் ஒப்படைத்து விட்டால் கர்ம வினையால் வரும் உடலையும் எடுக்க வேண்டியதில்லை.

வித்து மரமாகி, மரம் வித்தாகி, இப்படியே மாறி மாறி வருவதைப் போல நாம் எண்ணுகிற எண்ணங்களும், செய்கின்ற செயல்களும் வினையும் விதியுமாகின்றன. அதுவே காரணகாரிய மென்பதாம். இது திரும்பத் திரும்ப இயற்கை நியதியால் முறை பிரளாது வந்து கொண்டேயிருக்கின்றன. மனதில் எண்ணங்களற்று மனமும் அற்றுப்போகும் போது தான் திரும்பிவராத நிலையை அடையும். வித்தை சுட்டெரித்து விட்டால் மறுபடியும் அது முளைக்காததைப்போல.

உருவங்களை கண்ணுடி விளக்கிக் காட்டுகிறது, ஆனல் அந்த உருவங்களை அது ஏற்றுக் கொள்வதில்லை. அதுபோல கர்மயோகியும் தான் செய்யும் கர்மங்களை பற்றற்று செய்து வரவேண்டும் அதை தன்னதென்று தன் எண்ணத்தில் பதிய வைக்கக் கூடாது. அப்படி எவ்வளவு கர்மங்கள் செய்தாலும் அவைகள் அவனை பந்தப்படுத்தாது.

இயற்கையாகிய பிரபஞ்ச பள்ளிக்கூடத்தில் இன்பதுன்பங்களே அனுபவப் பாடங்களாயிருக்கின்றன. மாணுக்கன் பள்ளியில் பயின்ற பின் வெளியேறுவதைப் போல கர்மயோகியும் இன்பதுன்ப அனுபவங்களைப் பெற்று இயற்கையைக் கடந்து செல்லவேண்டும். போகப் பொருள்களுக்கு அடிமைப் பட்டு திரும்பத்திரும்ப, இயற்கைப் பிரபஞ்சத்தில் பிறந்து உழலக்கூடாது, சுயநலம் கருதி கர்மம்செய்தால் பந்தப்பட்டு பிறவி எடுக்கிருன். பரர் நலம் கருதி கர்மம் புரிந்தால் விடுதலையடைந்து பரத்துடன் லயித்து விடுகிருன்.

அகங்காரமற்று கர்மம் செய்வதற்கு கர்மயோகிக்கு ஒருவழியிருக்கிறது. அது தான் செய்யும் எல்லாக் கர்மங்களையும் பற்றற்று கடவுள் ஆராதனையாகச் செய்வதே கர்மங்களில் எத்தனையோ. விதமானவைகள் இருக்கின்றன. தன் மனதுக்குப் பிடித்தமான கர்மத்தை செய்யலாம் ஆனல் தான் செய்யும் காரியங்களுக்குக் கடவுள் பிரதிபலன் தரவேண்டுமென்ருே மக்கள் நன்றி

செலுத்த வேண்டுமென்றே நினைத்து செய்யக்கூடாது அப்படி நினைப்பதால் அது பந்தத்தை உண்டாக்கும். பந்தத்தின் காரணமாக பிறவி ஏற்படும்.

பொருள் சேர்க்கும் கர்மமானாலும் பொதுநல காரியங்களானாலும் தர்ம கைங்கரியங்களானாலும் எவ்வகை கர்மங்களாயிருந்தாலும் நீ வலிய தேடிக் கொண்டுபோய் செய்யாதே, அது தானாக வந்து உன்னைச் செய்யும்படி தூண்டினால் அந்தக் கர்மத்தைப் பற்றற்று கடமையாகக் கருதி செய்தால் அது உனக்கு இன்பதுன்பத்தையும் பந்தத்தையும் உண்டாக்காது.

கடமை என்பதை இன்னது தான் என்று வரையறுத்து சொல்ல முடியாது. அது காலத்திற்கும் தேசத்திற்கும் மதத்திற்கும் தகுந்த படி வேறுபாட்டையும். சத்தியம் தர்மம் அஹிம்சை இவைகளை கடமையாகக்கொண்டு நாம் எந்தக்காரியத்தைச் செய்தால் அது நம்மை மேலான பதவிக்கு இட்டுச் செல்லுகிறதோ அந்த செயல்கள் தான் நமது கடமையாக இருக்க வேண்டும். அதுகாலம்தேசம் மதம் எல்லா மக்களுக்கும் பொருத்தமான கடமையாகும்: மிகப்பெரிய கடமைகளையும் கீழான மனப்பான்மையுன் செய்வானாகில் அவன் கீழோனாய் விடுவான். சிறு செயலையும் உயரிய மனப் பான்மையில் செய்து வந்தால் அவன் மேலோனாய் விடுவான். ஆதலால் மிகச் சிறிய செயலையும் நாம் உயரிய மனப் பான்மையில் செய்து வருவது நமது கடமையாகும்.

நாம் வினையாற்றும் போது நாம் செய்யும் கர்மங்களினுல் இன்பமே வருமென்று சொல்ல முடியாது. துன்பமும் வரலாம்; தாயானவள் தன் குழந்தையைப் பராமரிக்கும் போது எவ்வளவு கஷ்டம் வந்தாலும் அன்போடு சகித்துக் கொண்டிருப் பதைப் போல, நம் செய்கையால்வரும் இன்பதுன்பங் களைச் சகித்து நடுநிலைமை வழுவாமல் கர்மத்தை செய்து வரவேண்டும். கஷ்டத்துக்காக பயந்து கர்மத்தை முறை தவறிச் செய்தால் அது கர்மயோக மாகாது.

கர்மயோகம் செய்யும் சதிபதிகள் நல்லொழுக்கங் களில் சிறந்தவர்களாயிருக்க வேண்டும். தங்களைத் தவிர மற்றர்களை தாய் தந்தையைபோலவும் சகோதர சகோதரிகள் போலவும் பாவிக்க வேண்டும். ஒரு வண்டியில் பூட்டப்பட்ட எருதுகள் போல ஒற்று மையுடன் இருவரும் நடந்து கொள்ள வேண்டும். வண்டியில் பூட்டப்பட்ட எருதுகளில் ஒன்று இடர் செய்யுமாகில் வண்டி குறித்த இடம் போய் சேராது. குடும்பத்தில் கணவன் மனைவி இருவரும் மனமொத்து கர்மம் புரிந்தால் அது எளிதாயிருக்கும்.

ஆசை, ஆணவம், காமம், கோபமாகிய தீய குணங்களிருக்கு மட்டும் கர்ம பந்த முண்டாகுமே தவிர கர்மயோகம் உண்டாகாது எல்லாக்கெட்ட குணங்களும் போய் நற்குணங்களையே கையாள்பவன் தான் கர்மயோகம் செய்யத் தகுதியுடையவனுவான். அவன் செய்யும் கர்மத்தில் பந்தமிருக்காது அந்த

நற் கர்மமே அவனை பண்படுத்தி மேலாம் நிலையாகிய முக்தியடையும் மார்க்கத்தில் இட்டுச் செல்லும். மேல் நிலையை நாடும் கர்மயோகி முதலில் தன்னிடமுள்ள கெட்ட குணங்களை விட்டு நல்ல குணத்தையடைய முயற்சி செய்ய வேண்டும்

நல்ல ஜாதி மா மரம் நல்ல நிலம் கெட்ட நிலம் இவைகளில் எங்கு இருந்தாலும் அது நல்ல ருசியான பழத்தையே தரும். மரி அல்லது கர மாங்காய் மரம் நல்ல நிலம் கெட்ட நிலம் எந்த இடத்திலிருந்தாலும் அது புளிப்புள்ள பழத்தையே தரும் அது போல ஒருவருக்குப் பிறப்பினுலும் கர்மத்திறுலும் இழிவு உண்டாகாது. அவர் செய்யும் தீய கர்மங்களினுல் தான் இழிவு உண்டாகிறது. சுயநலப் பற்றற்று ஆசையற்று எந்தக் கர்மங்கள் செய்தாலும் செய்ய லாம் செய்கின்ற காரியம் நன்மையுடையவையாக இருந்தால் அதற்குத் தக்க நல்ல பலன் கிடைக்கும்.

தான் செய்கிற தொழிலிலிருந்து தான் தனக்கு லாப நஷ்டம் ஏற்படுகிற தென்று தான் தெரிந்து கொள்வதைப் போல தான் செய்யும் கர்மங்களி லிருந்து தான் மனிதன் மேலான நிலைக்குப் போவதும் கீழான நிலைக்குப் போவதும் என்பதை எவன் சந்தேக மின்றி தெரிந்து கொள்ளுகிருனே அவன் தான் ஆத்ம ஞானமடைய விசாரணை செய்ய தகுதி உடையவனுகி ருன். தான் செய்யும் கர்மத்துக்கு மூலகாரணமாகிய எண்ணம் சொல் இவைகளுக்கு சக்தியிருப்பதாக அறிந்து கொள்ளுகிருன். பின் தான் எண்ணக்கூடிய

எண்ணத்தையும் சொல்லக்கூடிய சொல்லையும் நன்னெறி அடையக்கூடிய வழியில் உபயோகிக்கிருன். இது கர்மயோகத்தின் ஒரு பகுதி ஆகும்.

உலக மக்களுக்கு நன்மை செய்கிறேன் என்னும் ஆணவம் கர்மயோகிக்கு இருக்கக்கூடாது உலகம் இவன் செய்யும் உதவியை எதிர்பார்த்து சிருஷ்டிக்கப்படவில்லை. இவன் மக்களுக்குச் செய்யும் உதவியால் இவனுடைய மனம் பரிபக்குவமடைந்து இவன் மேலான நிலைக்குப்போகிருன். ஆழ்ந்து யோசித்தால் இவன் தனக்குத்தானே உதவி செய்து கொண்டவனுகிருன். தேவலோகத்தில் நற்கர்மமோ அல்லது தீய கர்மமோ செய்ய வாய்ப்பு கிடையாது. அதனுல் நாம் மனித பிறவியில் செய்த நற்பலனை அங்கு அனுபவித்து விட்டு புண்ணியம் தீர்ந்தபின் மீண்டும் மனிதப் பிறவி எடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அப்படி எடுத்த பிறவியை செம்மையாகப் பயன் படுத்தி பற்றற்ற நிலையில் நற்கர்மங்கள் செய்தால் முக்தி நிலை அடையலாம். தீய கர்மங்கள் செய்தால் கீழான பிறவி எடுக்க வேண்டிய நிலை ஏற்படும். அதனுல் தான் மானிடப்பிறவி கிடைப்பது அரிதினும் அரிது என மேலோர்கள் கூறியுள்ளார்கள். தான் பரிபக்குவமடை உலகமும் உலகமக்களும் சந்தர்ப்பத்தை அளித்திருப்பதால் அவர்களுக்குக் கர்மயோகி நன்றியுடையவனுக இருக்கவேண்டும்.

உலகத்தில் இன்பமும் துன்பமும் கலந்தேயிருக்கிறது, அதைத் திருத்தி விட யாராலும் முடியாது. அது

இயற்கையின் நியதி வளைந்துள்ள நாய் வாலை நாம் எப்படி நிமிர்த்த முடியாதோ அது போல உலகத்தை எப்பொழுதும் ஒன்று போல சீர்திருத்த முடியாது. என்பதை நம் அனுபவத்தால் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எண்ணும் எண்ணத்தில் நடுநிலைமையும், அமைதியும், உண்மையை உள்ளபடி அறியும் அறிவும், சாந்தமும், மக்களிடத்து அன்பும், மற்றவர்களுக்கு செய்யும் உதவி தன்னைப் பண்படுத்துவதற்கு என்ற எண்ணமும் சுய நலப் பற்றுமற்று யார் கர்மம் செய்கிறார்களோ அவர்கள் உண்மையான கர்மயோகி ஆகிறார்கள்.

நாம் நல்ல கர்மத்தை செய்தாலும் அதில் சிறிது கெட்டதும் அடங்கியிருக்கும். கெட்ட கர்மத்தை செய்தாலும் அதில் சிறிது நல்லதும் கலந்திருக்கும் தனித்த நல்ல கர்மமும் தனித்த கெட்ட கர்மமும் உலகத்தில் கிடையாது. இரண்டும் ஏற்றத்தாழ்வாகக் கலந்தேயிருக்கும். அதைப் பிரித்துப் பார்த்துக் கர்மம் செய்ய யாராலும் முடியாது. இந்தக் கர்மத்தின் ரகசியத்தை அறிந்து கொண்டவனே கர்மயோகம் செய்யும் தகுதியுடையவன். உதாரணமாக நாம் சுவாசிக்கும் காற்று அருந்தும்நீர், உண்ணும் உணவு இவைகளிலுள்ள அநேக அணுமயமான ஜீவன்கள் நமக்குத் தெரிந்தும் தெரியாமலும் மரணமடைகின்றன. இவைகளைத் தடுக்க நம்மால் இயலாது, பால் நல்லதாக இருந்தாலும் அதை அளவுக்கு மீறி அருந்தினால் அது கெடுதல் உண்டாக்குகிறது. விஷம்

கெட்டதாக இருந்தாலும் வைத்யமுறையில் உபயோகப்படுத்தினால் அது நலம் செய்வதைப் போல அஹிம்சை சத்தியம் அன்பு கருணை தானம், தர்மப்படி நடத்தல் பற்றின்மை இவைகளைக் கொள்கைகளாகக் கொண்டு எந்தக்கர்மத்தைச் செய்தாலும் கர்மமே கர்மயோகமாகும்.

மதுபானம் பழக்கமுள்ளவர்களுடன் கூடினவன் மதுபானம் செய்வதும். சூதாடிகளுடன் கூடினவன் சூதாடிப்பழகுவதும், பக்தர்களுடன் சேர்ந்து பழகுபவன் பக்தியுடன் பஜனை பண்ணுவதும் போல நாம் அறிந்தோ அறியாமலோ எத்தகைய நடத்தையுடையவர்களிடம் பழகுகிறோமோ அத்தகைய பழக்கம் நமக்கு உண்டாகும். ஆதலால் கர்மயோகம் செய்கிற ஆத்ம சாதகன் கீழ்மையான நடத்தையுள்ளவர்களிடத்திலும் சுய நலமுள்ளவர்களிடத்திலும் தொடர்பு வைக்கலாகாது. மேல் மக்களிடத்திலும் கடவுளிடத்திலும் பற்று வைக்க வேண்டும்.

நேதிமார்க்கம் இதிமார்க்கம் என இரண்டு மார்க்கங்கள் உண்டு அதில் நேதிமார்க்கத்தை அனுஷ்டிப்பது திட சித்தமும் கூர்த்த புத்தியும் தீவிர வைராக்கியமும் உள்ள ஞானிகளுக்குத் தான் சுலபமாயிருக்கும். கர்மயோகம் செய்பவர்களுக்கு கடினமாயிருக்கும் இதிமார்க்கத்தை அனுஷ்டிப்பது சுலபம் நாம் அனைவரும் கர்மம் செய்தே தீர வேண்டியவர்கள். அதனால் நாம் அனைவரும்

கர்மம்செய்தே படிப்படியாக முன்னேறி மேல்நிலையை அடைய வேண்டும். முறையறிந்து கர்மம் செய்தால் நாம் செய்யும் கர்மமே கர்மயோகமாகும்.

ஜீவபோதத்தை அடைந்திருக்கும் ஆத்மா ஜீவ போதத்தை விடுத்து பரபோதம் அடைந்து இனிப் பிறவா நிலையை அடைய நான்கு மார்க்கங்கள் இருக்கின்றன. அவை கர்மம், பக்தி, யோகம் ஞானம் என்பனவாகும் அதாவது பூ, பிஞ்சு, காய் பழம் என்பது போல இதில் எது பெரியது எது சிறியது என்கிற வித்தியாசம் இல்லை. ஒவ்வொருமார்க்கத்தையும் சரியாக அனுஷ்டித்தால் நான்கு யோகங்களும் ஒன்று தான் வித்தியாசமில்லை என்பது முடிவில்தெரிய வரும். இதில் ஆரம்பத்தில் ஜீவன் கர்ம மார்க்கத்திலிருந்து தான் மேல் நிலைக்குப் போக வேண்டும். ஒவ்வொருயோகத்திலும் இந்தநான்கு யோகங்களும் கலந்தேயிருக்கும் ஆனல் ஒவ்வொன்றிலும் ஒன்று அதிகமாகியும் மற்றவை குறைந்துமிருக்கும். விசாரணை ஞானம் அதிகம் உள்ளவனிடம் கர்மம், பக்தி, யோகம் இவை மூன்றும் குறைந்திருக்கும் இல்லாமலிருக்காது உதாரணமாக மகாத்மா காந்தி அடிகளிடம் கர்மயோகமே மேலோங்கியிருந்தது. மற்ற யோகங்கள் பின்னணியில் இருந்தன கர்மயோகத்திலைலேயே அவர் மெய்ஞ்ஞானம் அடைந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ஸரிடம் பக்தியோகம் முன்னணியிலிருந்து மற்றவை பின்னணியிலிருந்தன ஸ்ரீ ராமலிங்க சுவாமிகளிடமும் பகவான் ரமண மகரிஷி அவர்களிடமும் யோகமார்க்கமே மேலோங்கியிருந்தது. மற்றவை குறைந்திருந்தன.

ஸ்ரீ மத் சுவாமி வி வே க ா ன ந் த ர் அவர்களிடம் விசாரணை ஞானயோகமே அதிகமாயிருந்தது மற்ற வை குறைந்திருந்தன. எல்லோரும் மெய்ஞ்ஞான மடைந்தவர்களே அதனுல் கர்மம், பக்தி, யோகம், ஞானம் என்பனவற்றில் ஒவ்வொன்றும் பெரியதோ சிறியதோ அல்ல. நான்கும் சமமானவைகளே. ஒவ் வொருவரும் தங்களுக்குப் பிடித்த மார்கத்தை தீவிர வைராக்கியத்துடன் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்தால் இனிப்பிறவா நிலையை அடையலாம்.

கர்மம் என்பதற்கும் கர்மயோகம் என்பதற்கும் உள்ள வித்தியாசம் நான் என்ற அகங்காரத்துடனும் எ ன து என்ற மமகாரத்துடனும் பேராசையுடன் பலனைக்கருதி கர்மம் செய்வதுவே கர்மமாகும். யான் எனது என்னும் ஆசையை விட்டுப்பலனைக் கருதாமல் எல்லா ஜீவன்களுக்கும் பயன்படும்படி ப ற் றி ன் றி யு ம் இடையூறின்றியும் அ ஹி ம் ஸ ா தர்மத்தோடு செய்யப்படும் கர்மமே கர்மயோகமாகிறது கர்மம் புரி வதையே கர்மயோகமாக்கி கர்மம் புரிபவன்மேலான நிலையை அ டை ய அருகதையுடையவனுகிருன். கர்மத்தைக் கர்மமாகவே புரிபவன் தன் நிலையில் தாழ்ந்து இன்னும் பல பிறவிகளை எடுக்கக்கூடிய கீழான நிலையை அடைகிருன்.

உலகத்திலுள்ள எல்லாபொருள்களையும்கண்டு இன் புறலாம். ஆனுல் அவைகளுக்கு நாம் புறம்பானவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. என்னுடையதென்று ஒரு பொருளையும் சொல்லாதே. ஏனெனில் சொன்ன

அக்கணமே துன்பம் வந்தெய்தும் என்னுடைய குழந்தை என்ற வார்த்தையைக் கூட மனதில் நினைக்காதே உனக்குக் குழந்தை இருந்தால் இருக்கட்டும். உன்னுடையது என்று எண்ணும் எண்ணத்தை மட்டும் விட்டுவிடு. இதைப்போலவே சகலத்தையும் எண்ணும் எண்ணத்தை விட்டு விடவேண்டும். இந்த உடல் உன்னுடையதுமன்று பிறருடையதுமன்று. இயற்கையாயுள்ள பஞ்ச பூதங்களுக்கு அமைய இவ்வுடல்கள் வருவதும், நிற்பதும், போவதுமாயிருக்கின்றன. நாம் நித்தியமாய் பந்தத்தினின்று நீங்கியவர்களாய் சாட்சி மாத்திரமாய் இருக்கிறோமென்ற உணர்ச்சியை நம் மனதில் கொண்டு வரவேண்டும். வருவதெல்லாம் வரட்டும் போவதெல்லாம் போகட்டும் ஆசை என்னும் கரத்தை நீட்டி அவைகளைப்பற்ற நினைக்காதே. ஏனெனில் அவ்வாறு நினைத்தவுடன் துன்பம் வந்துசேரும்.

நீ துறவியாய்க் காட்டுக்குப் போனாலும் சரி அல்லது இல்லறத்தானாக வீட்டிலிருந்தாலும் சரி யான் எனது என்னும் ஆசையை அகற்றி விடுவதுதான் முக்கியம். அரசனாயிருப்பவன் ஆசையின்றியிருக்கலாம் ஆண்டியாயிருப்பவன் ஆசையுடனிருக்கலாம். அதை அனுபவத்தில்தான் காண வேண்டும். சாதாரணமாக கடமை என்று சொல்வது உலக வாழ்வின் கீழான நிலைக்குட்பட்டதாகும். கடமைக்கு அமைந்து நடப்பதனால் பல முறையும் துன்பமுண்டாகலாம். கடவுளைத் துதிப்பதற்குக்கூட நேரமில்லாமல் கடமை அவர்களைப் பிடித்துக் கொள்ளும் வாய்ப்புண்டு.

ஆராய்ந்து பார்த்தால் உண்மையில் செய்வதற்குக் கடமையொன்று இருக்கிறது. அது ஆசையும், பற்று மின்றி தொழில் செய்து அதைக் கடவுளுக்கு அர்பணிப்பதுதான்.

சுதந்திரமின்றி நெருக்கடிக்குப் பயந்து ஆசையுடன் சத்தியத்துக்கு மாறுபட்டு செய்யும் காரியங்கள் யாவும் பற்றினை உண்டாக்கும். ஆசையினுலும் பற்றினுலும் செய்யப்படும் எந்தக் காரியங்களும் பற்றினை உண்டாக்கும். ஞானி விசாரணை அறிவு மார்கத்தினுலும், பக்தன் பக்தி அன்பு மார்க்கத்தினுலும் பெறுகிற பெருநிலையை கர்மயோகி ஆசையின்றி பற்றற்று செய்கின்ற கர்மத்தியாகத்தினுலேயே அடைந்து விடுகிருன்.

தன்னலமற்று கர்மம் செய்பவன்தான் கர்மயோகி ஆகமுடியும். தன்னல மறுப்பால்தான் '' நான் '' என்னும் ஆணவம் அழிவுறும். '' நான் '' என்ற அகங்காரம் அற்றபோதுதான் மெய்ஞ்ஞானமும் உண்டாகும். தன்னலமறுப்புள்ளவன் மனிதரில் தலையானவன்: (தெய்வப்பிறவி) தன்னைக் காத்துப் பிறரைக் காப்பவன் இராண்டாமவன் (வாழ்(வு)வாங்கு வாழும் மனிதப்பிறவி) தன்னுடைய, நன்மைக்காகப் பிறருக்குத்தீங்கிழைப்பவன் மூன்ருமவன் (எப்படியோ வாழ வேண்டும் என்று நினைத்து வாழ்பவன்) தன் நலத்துக்கும் அல்லாமல் தீங்குசெய்வதையே தொழிலாகக் கொண்டு வாழ்பவன் நான்காமவன் இவன் மிருகங்களுக்கும் கடையானவனுவான்.

நீ செய்யும் செயல், செய்விக்கப்படும் செயல், வேருெருவர் செய்வதை ஆமோதிப்பது இந்த மூன்றுக்கும் அதனுல் உண்டாகும் பலனை நீ அனுபவித்தே தீர வேண்டும். எப்படியெனில் நாம் செய்யும் செயலில் உள்ள இன்ப துன்பம் லாபநஷ்டம் நமக்கே வரும் என்பது உலகோர் அறிந்தஉண்மை நீ சொல்லி பிறரால் செய்விக்கப்படும் காரியங்களின் பலன் உனக்கு எப்படிக்கிடைக்குமென்ருல் நீ சொல்லாவிடில் அவன் அந்தக் கர்மத்தைச் செய்திருக்க மாட்டான் நீசொன்னுதால் தான் அவன் செய்தான். அதனுல் அந்த பலன் உன்னைச் சேரும். வேருெருவர் செய்யும் கர்மத்தை நீஆமோதிப்பதால் அவன் அந்தக் கர்மம் நல்லதோ கெட்டதோ அதையே தொடர்ந்து மேலும் மேலும் செய்து கொண்டே போவார். அதனுல் அவர் செய்யும் கர்மங்களில் உனக்கும் பங்குண்டு என்பதை அறிய வேண்டும்.

நாம் கர்மயோகம் புரிந்து முன்னேற நமது மனம் நமக்கு அதிகமாக ஒத்துழைப்பு தரவேண்டும். இல்லையேல் கர்ம மார்க்கத்தில் பலன் ஏற்படாது. நமது மனம் அமைதியுற்று பின் முக்தியடைய (கர்மம். பக்தி யோகம் மெய்ஞ்ஞானம் என நான்கு மார்க்கங்களை) வேதவியாசர் திருமூலர்முதலியரிஷிகளும் சித்தர்களும் (விபரமாகக் கூறியிருக்கிறர்கள்:)

நாம் அன்ருடம் செய்து வரும் நித்தியதை மித்தியங்களும் தொழில்களும் கர்மம் எனப்படும். சுய நலம் கருதி ஆசையுடன் கர்மங்களை நாம்செய்து வருவதால்

அதனுல் வரும் நன்மை தீமைகள் இன்ப துன்பங்கள் மனதை நிம்மதியடைய விடுவதில்லே. அதே கர்மங் களே சுய நலமின்றி பிறர் நலத்துக்காக ஆசையில்லா மல் தியாகபுத்தியுடன் செய்தால் மனம் சஞ்சலப்ப டாது. அமைதியுறும். அதனுல் இறைவனேயடைய வழியும் ஏற்படும்.

மானிடராய் பிறவி எடுத்த நம் வாழ்க்கையின் இலட்சியத்தை மறந்து பேராசையால் தூண்டப்பட்டு சுய நலத்துக்காக மற்றவர்களுக்கு பல இன்னல் களேச் செய்து அதனுல் வரும் தீவினேயை அனு பவிக்க கீழான பிறவி எடுப்பது நமது லட்சியமல்ல என்பதை நல்லோர்களிடமிருந்தும் சாஸ்திரங்களின் ஆராய்ச்சி அறிவினுலும் உணர்ந்து நாம் எப்படி வாழ வேண்டுமென்பதை அறிந்து அதன்படி வாழ்வது தான் வாழ் வாங்கு வாழ்வது. எப்படியாவது வாழ்ந்தே தீர வேண்டுமே என்று தன் மனம் போனபடி வாழ்வது வாழ்க்கையின் இலட்சியமல்ல அதுமிருக வாழ்வாகும்.

கடவுள் பக்தி, கல்வி அறிவு, சத்தியம் நற்பழக் கங்கள், அன்பு, தயவு, ஒழுக்கம், நல்லார் நட்பு, கொல்லாமை பொறுமை, ஆகிய நற்குணங்களுடன் பிறருக்குத் தீங்கு செய்யாமல் முடிந்த வரை உதவி புரிந்தும் தாய், தந்தை சுற்றத்தார் அகதிகள் இவர்களுக்கு ஆற்றவேண்டிய கடமைகளே சரிவர ஆற்றியும்; யாகம் யக்ஞம் செய்தும் தேவர்கள் பிதிர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளேச் செய் தும் மேலும் பொருமை, சினம், பேராசை சுயநலம்

பகைமை களவு, கொலை, பொய்பேசுதல் ஆகிய கெட்ட குணங்களை விட்டு எல்லோரையும் சமமாக மதித்து அன்பாக இனிமையுடன் பேசி ஜாதி, மதம் துவேசம் விட்டு விருப்பு வெறுப்பையும் தள்ளி நல்லோருடன் உறவாடி தொழில்களின் முக்கிய குணங்களை அறிந்து யாருக்கும் தீங்கு செய்யாது நன்மையே செய்யும் தொழில்களையே புரிந்து பொருள் சேகரித்து அழகுக்கும் பொருளுக்கும் ஆசைப்படாமல்குணவுதியான பெண்ணைமணந்துஇருவரும்மனம்ஒப்பி இல்லறம் நடத்தி தான தர்மங்களைச்செய்து, விருந்தோம்பி இருமக்களையே ஈன்றெடுத்து அவர்களுக்குக் குழந்தைப் பருவத்தில் சத்துள்ள ஆகாரம் கொடுத்து உடல் வளர்ச்சியுடன் மனவளர்ச்சியும் ஏற்பட கல்வி அறிவு புகட்டி நன்னெறியில் பழக்கி, வயதும் பக்குவமும் வந்தவுடன் குடும்பப் பொறுப்புகளை அவர்களிடம் ஒப்புவித்து விட்டு சன்மார்க்க நெறியிலுள்ள சாதுக்களுடன் கூடி அவர்கள் கூறும் அறிவுரையின் படி கால தேச மறிந்து நடந்து உலகப்புகழுடன் மெய்ஞ்ஞானமும் அடைந்து நாம் எங்கிருந்து வந்து இந்த பூலோகத்தில் பிறவி எடுத்தோமோ அதற்குக் காரணகர்த்தாவான இறைவனிடமே சேர்ந்து இனிப் பிறவா நிலையை அடைவது தான் நமது வாழ்க்கையின் லட்சியமாகும்.

இத்தகைய வாழ்க்கை நடத்துபவர்கள் காட்டுக்குப் போய் அன்ன ஆகாரமின்றி உடலை வருத்தி கடும் தவம் செய்யவேண்டியதில்லை. வீட்டிலிருந்து கொண்டே மேலான பதவியை அடையலாம்.

எல்லா மதத்தவர்களும் சமயவாதிகளும் கர்மம் செய்தே தான் தீரவேண்டும். கர்மம்செய்யாமல் பெரு நிலையை அடையக்கூடிய சமயமோ மதமோ கிடை யாது, கர்மம் செய்வதில் இந்த மதத்தார் நல்லதே செய்கிறார்கள் அந்த மதத்தார் கெட்டதே செய்கிறார் கள் என்பதில்லை. எல்லா மதங்களிலும் தீமையும் நன்மையும் கலந்தேதானிருக்கின்றன.

இந்து கிருஸ்துவ முகம்மதிய மதங்கள் அதாவது வேதங்கள். பைபிள், குரான் இவைகளில் இறைவனின் நாமம் ரூபம் சின்னம் கிரிகைகளைப் பற்றி ஒவ்வொரு மதத்திலும் ஒவ்வொரு விதமாய்க் கூறியிருந்தாலும் கடவுள் நம்பிக்கையுடன் உலகில் உள்ள எல்லா ஜீவ ராசிகளிடத்திலும் சகோதர அன்புடன் அவை களுக்கு உதவி புரிய வேண்டுமென்றும் முறையாகக் கர்மம் புரிந்து பின் முடிவில் இறைவனையடைய வேண்டுமென்றும் எல்லா மதங்களும் ஒப்புக் கொள்ளு கின்றன.

ஆனால் அவைகள் அனுஷ்டிக்கும் மார்க்கம் தான் வேறுவேறாயிருக்கிறது. அது நீலகிரி மலைக்குப் பல பேர்கள் பலபாதைகளில் போகிறார்கள். அவர்கள் நடு வழியில் நின்று தங்கள் தங்கள் வழி தான் சிறந்த தென்று வாதிடுகிறார்கள் ஆனால்எல்லோரும் மலையின் உச்சியை அடைந்தவுடன் ஒவ்வொருவரும் தங்க ளுக்கு சௌகரியமான வழிகளில் வந்து மலைஉச்சியை அடையலாம் என்பதை உணர்ந்து கொள்ளுகிறார் கள். இவ்வாறு நடுவழியில் வாதம் செய்வது அறை குறை வாய்ப்பாடு படித்தவர்கள் சரியான கணக்கை சொல்ல முடியாததற்கு ஒப்பாய் விடுகிறது.

ஒவ்வொரு வரும் தங்கள் மதத்தைப் பூரணமாய் அறிந்து கொண்டால்தான் எல்லா மதங்கள் சொல்லுவதும் முடிவில் ஒன்று தான் என்பதை அறிந்து கொள்ள முடியும். மலை ஏறும் போது நடு வழியிலிருந்து கொண்டு மலை உச்சியில் உள்ளதை எப்படி அறிய முடியாதோ அதைப் போல தன்மதத்திலுள்ள சாஸ்திரங்களையே அறை குறையாகப் படித்து விட்டு வேறு மதங்களைக் குறை கூறிக் கொண்டிருந்தால் உண்மையை அறிய முடியாது.

கர்மம் என்பது எல்லா மார்க்கங்களிலும் ஒன்று தான். ஆனால் அதைச் செய்யும் வழிகள்தான் வெவ்வேருக சொல்லப்பட்டுள்ளன ஒவ்வொரு வரும் தங்கள் சமய, சான்ருேர்கள் எழுதிவைத்த நற்கர்மங்களை முறையாக அனுஷ்டித்து வந்தால் மேலான நிலைக்குப் போவது திண்ணம்.

**கர்மத்தில் பல வகைகள் இருக்கின்றன.**

1) கர்மம்:- நாம் நினைப்பது பேசுவது, தொழில் புரிவது ஆகிய எல்லாவற்றிற்கும் பொதுப் பெயராகும்.

2) காமியகர்மம்:- பேராசையுடன் உலகபோகப் பொருட்களை ஈட்டுவதும்; மண்ணாசை, பொன்னாசை பெண்ணாசை புகழாசை, சாஸ்திரஆசை ஆகியவைகளோடு உடல்நெடு நாள் இருக்க வேண்டுமென்று காயகல்பம் செய்வதும் மேலும் தனக்காக வேண்டி ஆசையுடன் செய்யப்படும் எல்லா கர்மங்களும்

3) சஞ்சிதகர்மம்:- ஜீவர்கள் பல ஜென்மங்களில் செய்து அதன் பலனை அனுபவிக்காமல் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் கர்ம பலன்களின் இருப்பு. இது விவசாயி விதைக்காக எடுத்து வைத்திருக்கும் விதை தானியம் போல.

4) பிராரப்தகர்மம்:- ஜீவர்கள் முன் பல ஜென்மங்களில் செய்து இந்த ஜென்மத்திலேயே அவசியம் அனுபவித்துத் தீரவேண்டிய கர்மங்கள். இதுவிவசாயி தினசரி சாப்பாட்டுக்காக எடுத்துவைத்து சாப்பிட்டு வரும் தானியம்போல.

5) ஆகாமியகர்மம்:- ஜீவர்கள் இந்த ஜென்மத்தில் நடைமுறையில் செய்து அடுத்த பிறவியில் அனுபவிக்கவரும் கர்மங்கள் இது விவசாயி தன் பூமியில் இனிமேல் தனக்குப் பலன் கருதி செய்யப்போகும் பயிர்போல.

பிரம்மஞானம் வந்தால் சஞ்சித கர்மம் தீ பட்ட பஞ்சு போல தீர்ந்துவிடும். பிராரப்தகர்மத்தை மெய்ஞ் ஞான மடைந்தவர்களும் னுபவித்தே தீர வேண்டும். இந்த ஜென்மத்தில் பலன் கருதி கர்மங்கள் செய்வதால் ஆகாமியகர்மம் உண்டாகாது அதன் பலனை அனுபவிக்க அடுத்தஜென்மம் உண்டாகிறது. பலனைக் கருதாமல் செய்தால்அனுபவிக்கவேண்டிய கர்மம் இல்லாததால் பிறவி உண்டாகாது.

அம்பராய்த்தூணியில் தயாராய் வைக்கப்பட்டிருக்கும் அம்புகள்போல சஞ்சிதகர்மங்கள்-பறவையின் மேல் விட்ட அம்புபோல பிராரப்தகர்மங்கள். இனிமேல் விடுவதற்குத் தயாராக கையில் எடுத்துவைத்திருக்கும் அம்புபோல ஆகாமியகர்மங்கள்.

பிராரப்தகர்மப்படி வரும் சுகதுக்கத்தை நாம் இப்படி வரவேண்டும் அப்படி வரவேண்டும் என்று மனதில் வீண்வருத்தப்படுவது அறியாமை. எதைப்போலவென்றல் காசிக்குப் போகும் ரயிலில் பிரயாணம் செய்பவன் ரயில் டிரைவருக்கு காசிக்கு வழி காட்டுவதைப்போல.

பிராரப்தகர்மம் அனுபவிக்க வேண்டியவர்களுக்கு தியானம் செய்தாலும் மனது அடிக்கடி வெளியில் வரும். (அதிகக்கடன்பட்டவர்கள் எங்கு ஒழிந்திருந்தாலும் அடிக்கடி வாரண்டு வந்து பிடித்து வெளியிலிழுப்பதுபோல) மெய்ஞ்ஞானிசகலத்தையும் மித்தை என்று தள்ளிவிட்டிருந்தாலும் பிராரப்தகர்மத்தை அனுபவித்தே தீரவேண்டும். ஆனல் மெய்ஞ்ஞானி அதை அனுபவிக்கும்போது சாந்தமாக அனுபவிப்பான் அஞ்ஞானம் போய் மெய்ஞ்ஞானம் வந்துவிட்டாலும் தேகம் பிராரப்தகர்மம் தீரும் வரையிருக்கும். (மழைபெய்து நின்றுவிட்டாலும் அதன் அம்சமான ஜலம் வற்றிப்போகும் வரை கொஞ்ச நாள் இருப்பதுபோல.)

ஞானிக்கு பிராரப்தகர்மம் உண்டு என்பது பரதிருஷ்டியால் இல்லை சுயதிருஷ்டியால் வெளியி

லிருந்து பார்ப்பவர்களுக்கு ஞானியும்பிராரப்தகர்ம த்தை அனுபவிப்பதாகத்தெரியும். ஆனல் சுகதுக் கங்கள் ஞானியின் மனதைக் கட்டுப்படுத்தாமலி ருப்பதால் ஞானியின் சுயதிருஷ்டியில் பிராரப்தத்தை அனுபவிப்பதில்லை.

நான் பிரம்மம் என்னும் மெய்ஞ்ஞானம் வந்தால் சஞ்சிதகர்மங்களெல்லாம் நசித்துப்போம் செயலுக்கு நான் கர்த்தாவல்ல என்று பலன்கருதாமல் காரியங்க ளைச் செய்தால் ஆகாமியகர்மம் இவனைச்சாராது. பிரா ரப்தகர்மத்தினல் எது வந்தாலும் சந்தோஷத்துடன் அனுபவித்துத் தீர்க்கவேண்டும்.

6) விகர்மம்:- செய்யக்கூடாது என்று விலக்கப் பட்ட தீய கர்மங்கள்,

7) அகர்மம்:- கர்மம் செய்யாமலிருத்தல் மனதில் நினைப்பது முதல் எந்தத் தொழிலும் புரியாம லிருப்பது.

8) விகிதகர்மம் மேன் மேலும் வளரக்கூடிய கர்மம். எதைச்செய்தால் மேலும் மேலும் தொடர்ந்து செய்யவேண்டியிருக்குமோ அப் படிப்பட்ட பிரவிருத்திக்கேதுவான கர்மம்.

9) உதாசீனகர்மம் ராகத்துவேசமின்றி நித் தியப்படி இயல்பாக செய்வது. நடத்தல், உண்ணல், தூங்குதல், போன்றவை.

10) பிராயச்சித்த கர்மம் தான் செய்த பாவத்தி ற்குப் பரிகாரமாக செய்யும் கர்மங்கள்

11) நித்தியகர்மம்:- தினந்தோறும் தவருமல் செய்யவேண்டிய வழிபாடுசம்பந்தமான கிரியைகள். ஸந்தியாவந்தனம், தியானம், பிரார்த்தனை முதலியவைகள்.

12) நைமித்தியகர்மம்:- எதைச்செய்யாவிட்டால் பாவம் உண்டாகுமோ எதைச் செய்வதினால் புண்ணியம் உண்டாவதில்லையோ அத்தகையதும் ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக விதிக்கப்பட்ட கர்மம்எதுவோ அதுவும் நைமித்திய கர்மமாகும்.

(கிரகண காலத்தில் செய்யும் கர்மம்)

13) பாரமார்த்திக கர்மம்:- யக்ஞம், தவம்தியானம், தியாகம், பரோபகாரம், சமாதி ஆகிய முக்திக்கேதுவான கர்மங்கள்,

14) பதவி வேண்டி கர்மம் செய்தல்:- உலகப் புகழைத்தரக்கூடிய ஜனாதிபதி, மந்திரி முதலிய பதவிகளையும், தேவனாகப் பிறக்க வேண்டி செய்யப்படும் யாகம் யக்ஞம் தவம் செய்தலும்; நூறு அஸ்வமேதயாகங்கள் செய்து தேவேந்திரனாகப் பிறக்கிற பதவியும் சாலோக, சாமீப சாரூபம் என்னும் சிவலோகம் வைகுண்டம் முதலிய பதவிகளும், இவைகளெல்லாம் பலனைக்கருதி செய்யும் கர்மங்களாகும். இவைகளெல்லாம் மேலான பதவியைக் கொடுக்குமேயொழிய இதனால் இனிப் பிறவாநிலையை அடைய இயலாது.

15) நிஷ்காமிய கர்மம்:- நிஷ்காமியகர்மம் என்பது சத்தியம், தர்மம், தன்னலத்தியாகம், உலகத்தில் உள்ள மண், பெண், பொன், பொருள், புகழ், சாஸ்திரம் உடல், இந்த ஆசைகள் எல்லாவற்றையும் விட்டும் சிவ லோக பதவியோ அல்லது வைகுண்ட பதவியோ கூட தேவையில்லையென்று பற்றற்று கர்மம் செய்தால் தான் இனிப் பிறவா நிலையை அடைய முடியும். இதுவே நிஷ்காமியகர்மமாகும்.

காமியமின்றி கர்மம் செய் என்பது புத்தகத்தின் தலைப்பு. ஆசையில்லாமல் எப்படி கர்மம் செய்வது? என்று சிலர் ஐயப்படலாம். ஆம் ஆசையில்லாமல் கர்மம் செய்ய முடியாது. ஆனால் ஆசையில் நான்கு வகைகள் உண்டு. ஒவ்வொரு வகையிலும் ஆறு பிரிவுகளும் உண்டு.

## ஆசை

1. ஆசை என்பது பொதுப்பெயர். அதில் நன்மையோ, தீமையோ, பந்தமோ இல்லை. சாதாரண பொது ஆசை என்பது பசித்தால் உண்பது, தண்ணீர் குடிப்பது, நடப்பது, சுவாசிப்பது முதலிய தனக்கும் பிறருக்கும் தீங்கு செய்யாததும் எதிலும் பற்றில்லாததுமான இயற்கையான கர்மங்களை செய்வதில், பந்தமோ, பாவமோ இல்லை. எறும்பு முதல் புழு, பூச்சி பறவை, மிருகம், மனிதர், தேவர் வரையிலும்,

இயற்கையாக எல்லா ஜீவராசிகளும் இயங்கும்படி இறைவனுலேயே இந்த ஆசை சிருஷ்டிக்கப்பட்டிருக் கிறது.

ஆகையால் இந்த ஆசையில்லாவிட்டால் சகல மும் இயங்காது பிரபஞ்சத்தில் பாரம்பரியமாய் ஒன்றும் இருந்து வாழ முடியாது. அதனுல் அவசியம் ஒவ்வொரு ஜீவனுக்கும் இந்த ஆசை இருக்கவேண்டி யதுதான். இந்த ஆசை சிறிது தனக்கு இருக்க அருள் புரியும்படி ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரும் காளிதேவியை வேண்டிக்கொண்டதாக நாம் அறிகி ரேம். இந்த ஆசை பற்றுதலின்றி நடப்பதால் பந்தத்தை உண்டாக்குவதில்லை.

**சுயநலம் ஆசை**

2. சுயநல ஆசை என்பது தனக்கே வேண்டு மென்று பலனைக் கருதி கர்மம் செய்வது. தனக்கு கிடைத்ததை வைத்து திருப்தியுடன் அனுபவிக்காமல் ருசியாக சாப்பிட வேண்டும் என்றும், பலவாறுய் நெடு நாள் இருக்க வேண்டும் என்றும் மிகசிரமப்பட்டு தேடி அலைவதும்; மானம்காக்க சாதாரண நான்கு முழ துணியே போதுமானதாயிருக்க, டாம்பிகத்துக்காக அதிகமாக தேடி வீணுக செலவு செய்வதும்; இதுபோ லவே தன்னலத்திற்காகவே பொருள்தேடுவதும்; அவஸ்தையையும்; பந்தத்தையும் உண்டாக்குகிறது.

3. பேராசை என்பது பிறருடைய பொருளும் தனக்கே சேர வேண்டும் என்று கர்மம் செய்வது.

தன் தேவைக்குமேல் தனக்கு எவ்வளவு பொருள் இருந்தாலும் போ தா து என்று மேலும் மேலும் பொருளைத்தேடி அலைவது. அதிக பற்றுதலுடன் பொருளைத்தேட கர்மம் செய்வதால் அதிக பந்தம் உண்டாக ஏதுவாகிறது.

## நிராசை

4. நிராசை என்பது தனக்கு வேண்டும் என்று எதையும் அதிக பிரயத்தனப்பட்டு தேடாமல், தனக்கு கிடைத்ததை மன திருப்தியோடு சந்தோஷமாக அனுபவிப்பது தான் கேட்காமலேயே தனக்கு கிடைத்த பொருளை வேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளுவது வெறுப்பாகும். விருப்பும் வெறுப்பும் இல்லாத நிலை தான் நிராசைஎனப்படும். தனக்குகிடைத்த பொருளை மக்களுக்கும் உபயோகப் படுத்தி தானும் அனுபவிப்பது தான் விருப்பு வெறுப்பற்ற நிராசையாகும். இது முதல்ஆசையைப் போன்று பந்தமற்றதாகும்.

உதாரணமாக, ஞானம், அஞ்ஞானம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் என்பதில் ஞானம் என்பது பொது பெயர். இது எல்லா ஞானங்களுடனும் பொருத்தி சொல்வது. பொதுவான அறிவிற்கே ஞானம் என்பது பெயர்.

**அஞ்ஞானம்-** உலக செயல்களிலும், பாரமார்த்திக செயல்களிலும்; உலக வாழ்க்கைக்கு தேவையான அளவு கூட அறியாமலிருப்பது தான் அஞ்ஞானமெனப்படும்.

**விஞ்ஞானம்:** உலகப் பொருளைக்குறித்து முழுமையாக ஆராய்ச்சி செய்து அதன் செயல்களை பூர்ணமாக கண்டுபிடிப்பது விஞ்ஞானம் எனப்படும். இது தான் நமது விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ள ஆகாயவிமானம், வானொலி, டெலிவிஷன் போன்றவைகள்.

**மெய்ஞ்ஞானம்:** இகம், பரம் ஆகிய பிரபஞ்சத்தை ஆராய்ந்து உண்மையை அறிவது மெய்ஞ்ஞானமெனப்படும். நமது முன்னோர்களாகிய ஞானிகள் ஆராய்ச்சி, விசாரணை, அனுபவங்களால் ஆராய்ந்து உண்மையை உணர்ந்து இனி பிறவா நிலையை அடைந்தார்கள்.

## ஆசையின் ஆறு பிரிவுகள்

**1) மண் ஆசை:-** எல்லோரும் மண்மேல் தான் வீடு கட்டி, தொழில்செய்து, பயிர்செய்து வாழவேண்டும். இது இறைவனாலேயே படைக்கப்பட்டது. இதை பயன்படுத்துவது ஆசையாகாது. இந்த ஆசையில்லாவிட்டால் வாழமுடியாது அதனால் இந்த ஆசை இருக்கவேண்டியதுதான். இதனால் யாருக்கும் தீங்குஇல்லை அதனால் பந்தமும் ஏற்படாது. ஆனால் அவைகள் தனக்கே இருந்து தானே அனுபவிக்கவேண்டும் என்ற அகங்கார மமகாரத்துடன். எண்ணுவது தான் சுயநலஆசை இருப்பது போதாது இன்னும் மேலும் மேலும் வேண்டும் என்று விரும்புவது தான் பேராசை. இவைகளால் பந்தம் ஏற்படும். ஆதலால் இயற்கையாய் நமக்கு கிடைத்த மண்ணை அனுபவிக்கலாம் அதனால் பந்தமேற்படாது.

2) **பெண்ணாசை:-** தன் பரம்பரை விர்த்திக்காகவும், இல்லறம் நடத்தவும்; இயற்கை விதிப்படி மணந்து, இன்ப சுகத்தை அனுபவித்து, மக்களைப் பெற்று, இல்லற தர்மப்படி தானம் செய்து, மற்ற பெண்களை தாயாகவும், உடன் பிறப்பாகவும் பாவித்து வாழ்வதில் பெண்ணாசையில்லை. இது இறைவனால் இயற்கையாக சிருஷ்டிக்கப்பட்டது தான். இந்த ஆசை பந்தத்தை உண்டாக்காது. தன் மனைவி இருந்தோ இல்லாமலோ வேறு பெண்களை காமவிகாரத்தால் விரும்பினால் இது பாவம்,பழி, பந்தத்தையும் உண்டாக்கும்.

3) **பொன்னாசை:- (பொருள்)** பொன், பொருள் இல்லாமல் வாழ்வது சிரமமாயிருக்கும். ஒருவரிடம் யாசகம் செய்து வாழ்வதும் இழிவானது. யாருக்கும் தீங்கு செய்யாமல் பொருளைத் தேடி அதை தன் குடும்பத்திற்கும், உலக மக்களுக்கும் எல்லா ஜீவராசிகளுக்கும் பயன்படும்படி வாழ்வதில் யாதொரு பாவமும் பழியும் பந்தமுமில்லை.

தனக்கே வேண்டுமென்று பலருக்கு தீங்கு செய்து பொருள்தேடி அதை மற்றவர்களுக்கு கொடுக்காமல் தானே டாம்பீகமாக செலவு செய்வது சுயநலஆசை. எவ்வளவு வந்தாலும் போதாதென்று மேன்மேலும் பிரயாசையுடன் பொருள்தேடுவது பேராசை ஆகும். இவைகளால் பந்தமும், பாவமும், பழியும் உண்டாக வழி உண்டு. அவசியத்திற்காக நியாய மார்க்கத்தில் பொருள் தேடி அதை மற்றவர்

களுக்கும் பங்கிட்டு வாழ்ந்தால் பந்தம், பழி, பாவங்கள் வராது.

4) **புகழ் ஆசை;**- மக்களும், மற்ற ஜீவராசிகளும் நன்மார்க்கத்தில் செல்ல சேவை செய்து அதனுல் வரும் புகழை அனுபவிக்கலாம். அது ஆசையாகாது அந்த புகழ் நெடுநாள் நிலைத்து நிற்கும். தீயமார்க்கத்தில் பொருளை விரையம் செய்து, பல துன்பங்களை மக்களுக்கு இழைத்து அதன் மூலம் பட்டம், பதவி ஆகிய புகழைத்தேடினுல் அது பாவமும், பந்தமும் ஆகும். அந்த புகழும் நெடுநாள் நிலைத்து நிற்காது.

5) **சாஸ்திர ஆசை:**- மக்கள் நல்வாழ்வு வாழ்ந்து, மேலான நிலையை அடையும் உண்மை தத்துவத்தை விளக்கி காட்ட எவ்வளவு சாஸ்திரங்கள் படித்தாலும் அது சாஸ்திர ஆசை ஆகாது. நான் அதிகம் சாஸ்திரங்களை படித்திருக்கிறேன் என்ற கர்வத்துடன் மக்களுக்கு உபதேசம் செய்து அதனுல் ஊதியம் பெற்று, அதை மக்களுக்கு உபயோகிக்காமல் தானே அனுபவிப்பது சுயநல ஆசை: இதுவும் போதாதென்று மேன்மேலும் பல வழிகளில் சம்பாதிப்பது பேராசையாகும். இது பாவத்தையும், பழியையும், பந்தத்தையும் உண்டாக்கும். அதனுல் சாஸ்திரங்களை கற்றிருக்கிறேம் என்ற கர்வமில்லாமல், அதை மக்களின் நன்மையின் பொருட்டு பயன்படுத்துவது ஆசையாகாது. அவ்வாறு செய்வதும் நல்லது தான்.

6) **உடலாசை:**- உடல் வாழ்வதற்கு தேவையான அளவு ஆகாரம் சாப்பிட்டு உடலை காப்பாற்று

வதில் தோஷமில்லை. ஆகாரம் சாப்பிடாமல்இருந்தால் உடலே இருக்காது. ஆனால் உடலை பருக்க வைக்க வேண்டும் என்றும், இன்னும் நெடுநாள் இருக்க வேண்டும் என்னும் ஆசையுடன் அளவுக்கு அதிகமாகவும் நாவின் சுவைக்காகவும் சாப்பிடுவதும். கிடைத்ததை மற்றவர்களுக்கு கொடுக்காமல் தானே உண்பதுமே சுயநல ஆசையும் பேராசையுமாகும். இதனால் பந்தமும் பாவமும் ஏற்படும். உடலை பாதுகாக்க அளவறிந்துண்பது ஆசையாகாது.

கர்மத்தையும், நான்குவிதமான ஆறு பிரிவுகள் உள்ள ஆசைகளையும் ஆராய்ந்து அவைகளிலுள்ள முரண்பாட்டை அறிந்து இறைவனால் சிருஷ்டிக்கப் பட்ட இயற்கையான ஆசையுடன் யாருக்கும் தீங்கு இல்லாமல் பற்றற்று கர்மம் செய்தால் அதுவே கர்ம யோகம் ஆகிறது. இதுவே முக்தி அடைய வழியும் ஆகும்.

O——▭——O

எக்கர்மம் செய்தாலும் ஈசன் தனை வேண்டி
அக்கர்மம் தனைச்செய்வாய் அறிவுள்ள என்மனமே
எத்தொழிலைச் செய்தாலும் அத்தொழிலில் பேதமில்லை
அத்தொழிலின் உண்மைதனை அறிந்திடுவாய்
என்மனமே
பலனை கருதாமல் பற்றற்று கர்மம் செய்தால்
நலனடைவாய் நல்லுலகில் நன்றியுள்ள என்மனமே
பலனை கருதியே பற்றுடனே கர்மம் செய்தால்
நலனைத் தராதுனக்கு நாசம் தரும் என்மனமே

மன அறிவுறுத்தல்.

## எமது வெளியீடுகள்

| | |
|---|---|
| அனுபவ விவசாய நூல் | இல்லை |
| வாழ்க்கை அனுபவம் | ,, |
| உலக அனுபவம் | ,, |
| புகையிலை பயிர் செய்தல் | ,, |
| ஞானவாசிட்டக் கருத்துக்கள் | ,, |
| மனோதத்துவ ஆராய்ச்சி | 7-50 |
| நல்வாழ்வு வாழ (இரண்டாம் பதிப்பு) | 3-00 |
| வாழ்க்கையின் வழிகாட்டி | 2-00 |
| மன அறிவுறுத்தல் | 2-25 |
| விவேக சூடாமணி சாரம் | 3-00 |
| மெய்ஞ்ஞான சாதகருக்கு | 4-00 |
| விசார சாகர சுருக்கம் | 4-00 |
| ஸ்ரீ மத் பகவத்கீதை சாரம் | 1-50 |
| காமியமின்றி கர்மம் செய் | 3-00 |

(தபால் செலவு தனி)

புத்தக விலையுடன் மனோதத்துவ ஆராய்ச்சிக்கு ரூ. 1-35-ம் மற்றவைகளுக்கு பைசா 40 - ம் சேர்த்து அனுப்பினால் நூல்-அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.

கிடைக்குமிடம் :

நிர்வாகி & பிரசுரிப்பாளர்,
முருகானந்த நிலையம்
சிக்காரம்பாளையம் (அஞ்சல்)
காரமடை - 641 104, கோவை மாவட்டம்.

ராஜேந்திரா ஆர்ட் பிரிண்ட்டர்ஸ், காரமடை Ph: 301